**TNEB**
**எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

மலர் - 2 ✧ இதழ் - 1 ✧ ஆகஸ்ட் 2019

நிர்வாக ஆசிரியர்
**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு
**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)
**A. செந்தில்குமார்**

39/101, சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

# யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே...

**2018**ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20ம் நாள் கிடைக்கப் பெற்ற சென்னை உயர்நீதிமன்ற உத்தரவினை நடைமுறைப்படுத்த வேண்டி வாரியத்தோடு பேசியும், நீதிமன்ற உதவியை நாடியும் நாம் எடுத்த முயற்சியில் நமது பெடரேஷனை வாரியத்தோடு உயர்மட்ட பேச்சுவார்த்தை நடத்தும் தொழிற்சங்கங்களின் பட்டியலில் இணைத்து உத்தரவிட்ட வாரியத் தலைவர் அவர்களுக்கும், வாரிய செயலாளர் அவர்களுக்கும், செயலக பிரிவு அலுவலர்கள் அனைவருக்கும் நன்றிகளை உரித்தாக்குவோம். நீதிமன்ற வழக்கில் நமக்கான உரிமையைப் பெற்றுத் தர தொடர்ந்து வழக்காடிய வழக்கறிஞர் அன்புக்கினிய தோழர் அஜய்கோஷ் அவர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குவோம்.

**கடந்த 2018ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27ம் நாள் நடைபெற்ற நமது மாநாட்டில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் "மின்வாரியத்தில் அடுத்த பேச்சு வார்த்தை உங்களது பெடரேஷன் இல்லாமல் நடக்காது" என உறுதியளித்து பேசியது நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது மட்டுமல்ல "யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்பது நிரூபணமாகியுள்ளது. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்!**

கேங்க்மேன் நியமனத்தில் வாரியம் நீதிமன்றத்திற்கு பதில் அளிப்பதில் காலம் தாழ்த்துவதில் காரணம் தெரியாத நிலையுள்ளது ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்வது குறித்து பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருவதை வாரியம் இலகுவாக கடந்து சென்றுவிடலாம் என்று எண்ணினால் வாரியத்திற்கு நன்மை பயக்காது.

2019ல் பட்டயப் படிப்பு பகுதி நேரத்தில் பயின்றவர்கள் தொழில் நுட்ப உதவியாளர்களாக உள்முகத் தேர்வில் எடுத்திட முன் வர வேண்டும், பதவி உயர்வில்லாத மின்பாதை ஆய்வாளர் களுக்கு மிகை நிலை ஆக்க முகவர் (Super Numery Foreman) பதவி வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும், சென்னை தலைமை அலுவலகத்தில் பெண் பணியாளர்கள், அலுவலர்கள், பொறிஞர்கள் பெருமளவில் பணி செய்வதால் பேறு கால விடுப்பு முடிந்து பணிக்கு திரும்புவோர்கள் நலன் காத்திட பகல் நேர குழந்தை காப்பகம் (Chrech) அமைத்திடல் வேண்டும் என்பது போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய திருவண்ணாமலை செயற்குழு தீர்மானங்களை நிறைவேற்றிட வாரியம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிட வேண்டும்.

பொதுத்துறை பங்குகளை விற்பதில்தான் தேசத்தின் கடனை அடைக்க இயலும் என கூறி பொதுத்துறை நிறுவனங்களை விற்க முயலும் நிலை தொடர்வதை சமீபத்தில் சேலம் உருக்காலையில் நடைபெறும் போராட்டத்திலிருந்து அறிகிறோம். நவரத்தினா அந்தஸ்திலுள்ள சேலம் உருக்காலையை விற்க முனைவது போன்று பிற கேந்திர தொழில்களையும் விற்றுவிடுவார்களோ என்ற அச்சம் தொழிலாளர்கள் மத்தியில் சூழ்ந்துள்ளது. இதுவரை நடைமுறையிலுள்ள தொழிலாளர் நலச்சட்டங்களை முற்றிலும் மாற்றி நான்கு சட்டங்களுக்குள் முடக்க நினைக்கக்கூடிய மத்திய அரசின் செயல் தொழிலாளர் நலன்களை புறக்கணிப்பதாகும்.

நீலகிரி மாவட்டம் அவலாஞ்சி மலைப்பகுதியில் பெய்த பெருமழையில் நமது மின்உற்பத்தி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை பெரும் பாதிப்பிலிருந்து மீட்புப் பணி மேற்கொண்டு உயிர்ச் சேதமின்றி பாதுகாத்துள்ள அரசுக்கும், தன்னார்வ தொண்டர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குவோம்.

**22.2.2018ல் கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தப்படி வேலைப்பளு பதவிகள் அனுமதியளித்திட இன்னும் எத்தனை மாதங்கள் வாரியத்திற்கு தேவைப்படும்!?**

**1.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கிட வேண்டுமல்லவா? இதற்கான பேச்சுவார்த்தை தொடங்கிட வேண்டுமல்லவா? உரிய காலத்திற்கு முன்பே பேச்சுவார்த்தை தொடங்கி முடிவு கண்டிட வாரியம் முன் வரவேண்டும்.**

**ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரத்திற்கான பேச்சுவார்த்தையை தொடங்க வலியுறுத்திட திருவண்ணாமலை செயற்குழு தீர்மானத்தின்படி சென்னையில் சங்கமிக்க தயாராவோம்!**

**- ஆசிரியர்**

**எம்ப்ளாயீஸ் பெடரேஷனை வாரிய உயர் மட்ட பேச்சு வார்த்தையில் கலந்திட பட்டியலில் இணைத்திட்ட உத்தரவு**

## Tamil Nadu Generation and Distribution corporation Limited

**SECRETARIAT BRANCH**
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai,
Chennai - 600 002.

**Letter No. 7738/A3/A31/2018-23, Dated : 26.07.2019**

From

**Thiru. V. Chinnappaiyan,** M.A., BL.,
Secretary.

To

**The General Secretary,**
Tamil Nadu Electricity Board Employees Federation,
No. 39/101, Singanna Street,
Chinthathiripet, Chennai - 600 002.

Sir,

***Sub*** : *TANGEDCO - Contempt petition No. 2669 of 2018 in Writ Petition No. 2568 of 2018 filed by Tamil Nadu Electricity Board Employees Federation Vs. Chairman cum Managing Director - Direction of the Hon'ble High Court - Participation in all negotiations - Intimated.*

***Ref*** : *Orders passed by the Hon'ble High Court, Madras in W.P.No. 2568/2018 dated 02.04.2018.*

In compliance with the directions of the Hon'ble High Court, Madras in W.P.No. 2568/2018, I am to say that it has been decided to include your union in the list of unions invited for discussion at Apex level along with the other 17 unions and to inform you to participate in all negotiations conducted by the TANGEDCO in future.

Yours faithfully,

**Section Officer**
for Secretary

# செயற்குழு சுற்றறிக்கை

**அன்பிற்கினிய தோழர்களே! வணக்கம்.** நாள் : 29.07.2019

தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழு ஜூலை 27 மற்றும் 28 ஆகிய இரு நாட்கள் திருவண்ணாமலையில் உள்ள உண்ணாமுலை திருமண அரங்கில் பெடரேஷன் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

தலைவர் தலைமையுரையில் கடந்த செயற்குழுவிற்கு பின்னர் நமது தொடர் நடவடிக்கையின் பலனாய் பெறப்பட்ட உத்தரவுகள் குறிப்பாக கஜா புயல் மும்மடங்கு ஊதியம் வழங்கல், 40 வயதான பெண் அசசர்கள் இளநிலை உதவியாளராக பணிமாற்றம் போன்றவைகளெல்லாம் குறிப்பிட்டு பேசினார்கள்.

நீதிமன்ற உத்தரவினை அமல்படுத்தி வாரியம் உத்தரவிட்டு பேச்சுவார்த்தைக்கான சங்கங்களின் பட்டியலில் இணைத்திட்டமைக்கு நன்றி தெரிவித்ததுடன், கேங்க்மேன் நேரடிய நியமனத்தில் தீவிரம் காட்டும் நிர்வாகம் ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரம் குறித்து அமைதியாக இருப்பது சரியல்ல என்பதை குறிப்பிட்டு பேசியதுடன் இன்றிருக்கக் கூடிய அரசியல் சூழ்நிலையில் தொழிற்சங்க சட்டங்களின் மீதான மத்திய அரசின் பார்வை எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் என்பதை விரிவாக எடுத்துக் கூறி செயற்குழு விவாதம் சிறப்பாக அமைந்திட கேட்டுக் கொண்டதுடன் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் உருவான வரலாறுகளையும் அதற்கான காரணங்களையும் நினைவு கூர்ந்து உரையாற்றினார்கள்.

பொதுச்செயலாளர் அறிக்கையில் கடந்த செயற்குழு அவசரமாக ஏப்ரல் மாதத்தில் சென்னையில் கூடி முடிவெடுத்ததை தொடர்ந்து மூன்று மாத கால இடைவெளியில் நாம் இங்கு சந்தித்திருப்பதை மேற்கோளிட்டு இடைப்பட்ட காலங்களில் நமது பெடரேஷனின் செயல்பாடுகளை விரிவாக எடுத்துரைத்தார்கள்.

26.07.2019ல் மின்சார வாரியம் நமது பெடரேஷனை வாரிய உயர்மட்ட பேச்சு வார்த்தைக்கான சங்கங்களின் பட்டியலில் இணைத்து உத்திரவிட்டதை வரவேற்று வாரியத்திற்கு குறிப்பாக வாரியத் தலைவர், செயலாளர் மற்றும் அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்ததுடன் சட்டரீதியான போராட்டத்தில் சிறப்பாக வழக்கை நடத்தி உத்தரவு பெற்றுத் தந்த நமது வழக்கறிஞர் அவர்களுக்கும், சிறப்பு நன்றியையும் தெரிவித்ததுடன் இரண்டாண்டுகளாக நல்லதொரு முடிவினை எட்டும் வரையில் பொறுமையுடன் எல்லா வகையிலும் ஒத்துழைத்த மாநில மண்டல வட்ட கோட்ட நிர்வாகிகளுக்கும், எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மீது நம்பிக்கை கொண்டு தொடர்ந்து ஆதரவளித்து வரும் உறுப்பினர்களுக்கும், மின்சாரத் தொழிலாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

நமது மாநில மாநாட்டு தீர்மானங்கள் மற்றும் கடந்த செயற்குழு கூட்டங்களில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் மீதான பரிசீலனையில் வாரியத்தால் முடிவுக்கு வராத கோரிக்கைகளின்மீது மின்சார வாரியத்தின் நடவடிக்கையை குறிப்பிட்டு பேசி நமது ஒற்றுமை மிக்க பலமே வெற்றியைத் தேடித் தரும் என குறிப்பிட்டு இவ்வாண்டு உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்திட கேட்டுக் கொண்டார்கள்.

கட்டிட நிதி வசூலை தீவிரப்படுத்தி நமது குறிக்கோளை அடைய பெருமுயற்சி கிளைகள் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டதுடன் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் ஆயுள், ஆண்டு சந்தாக்களை அதிகப்படுத்திடவும், ஆண்டு சந்தா புதுப்பித்தலை உரிய நேரத்தில் செய்திட கேட்டுக் கொண்டார்கள்.

கேங்க்மேன் வழக்கின் நிலை, ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரத்திற்கான முயற்சிகள், பகுதி நேரப் பணியாளரின் நியமனம், கடந்த ஊதிய உயர்வு ஒப்பந்த அடிப்படையில் வேலைபளுவுக்கான பதவி அனுமதி, கணக்கீட்டாய்வாளர் பதவி உயர்வுக்கான பணிகள் உறுப்பினர் எண்ணிக்கை அதிகப்படுத்துவது, எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் மாத இதழ் பரவலாக எல்லா தொழிலாளர்கள் மத்தியிலும் கொண்டு செல்வது, மின்சார வாரியத்தில் பணியாற்றும் அனைவருக்குமான பணிகளை முன்னெடுத்து செல்வது போன்ற பணிகளை மேற்கொண்டு முன்னேற்றமான பாதையில் செல்ல வேண்டும் என கூறினார்கள்.

பொருளாளர் அவர்கள் அறிக்கையில் ஜூலை மாதம் வரை உள்ள வரவு செலவு கணக்குகளை விவரித்து உரையாற்றினார்கள். 2019ம் ஆண்டுக்கான சந்தா வரவு மற்றும் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் ஆண்டு ஆயுள் சந்தா விபரங்களை கூறி உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் பணி தீவிரமாக்கப்பட வேண்டுமென கேட்டுக் கொண்டார்கள்.

இரண்டு ஆண்டில் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படும் விதமாக நாம் உயர்ந்திருப்பது எதிர்காலத்தில் நமது செயல்பாடுகளுக்கு மிகவும் பலமாக அமையும் என குறிப்பிட்டார்.

கட்டிட நிதி இலக்கினை எட்ட களத்தில் மேலும் பணிகள் தீவிரப்படுத்தி இரு மாதத்திற்குள் முடித்தால்தான் திட்டமிட்டபடி செயல்பட முடியுமென குறிப்பிட்டார்கள்.

எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் ஆண்டு சந்தா புதுப்பித்தல், ஆயுள் சந்தா அதிகரித்தல் விரைந்து முடிக்க கேட்டுக் கொண்டதுடன் உறுப்பினர் சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி போன்றவைகளுக்கு தனி வங்கிக் கணக்கு, கட்டிட நிதிக்கு தனி வங்கிக் கணக்கு, எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் ஆண்டு, ஆயுள் சந்தா செலுத்த தனி வங்கி கணக்கென மூன்று வங்கி கணக்கு தொடங்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டு எண்களையும் தந்து இனி வரும் காலங்களில் வசூல் செய்வதை அனுப்பும்போது தனித்தனியாக அந்தந்த கணக்கில் வங்கியில் செலுத்திட கேட்டுக் கொண்டார்கள்.

செயல் தலைவர் அவர்கள் உரையில் பேச்சுவார்த்தைக்கான உரிய அங்கீகாரம் நமது பெடரேஷனுக்கு கிடைத்துள்ளதை வரவேற்று பேசியதுடன் கட்டிட நிதிக்கான வசூலில் கிளைகள் கவனம் செலுத்தி திட்டமிட்டபடி இவ்வாண்டுக்குள் நமது இலக்க முடிவுக்கும் அளவில் செயல்பட கேட்டுக் கொண்டார்கள்.

ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரம் என்பதை கேள்விக்குறியாக்க நினைக்கும் வாரியத்தின் எண்ணத்தை மாற்றி நிரந்தரம் செய்வதற்கான முயற்சியில் நீதிமன்ற நடவடிக்கையுடன், நேரடி நடவடிக்கையிலும் ஈடுபட்டு இயக்கரீதியான செயல்பாட்டில் நிரந்தரம் செய்திட வைத்திட வேண்டுமென உறுதியான முடிவை செயற்குழு எடுக்கும் அளவில் விவாதங்கள் அமைய வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள்.

அமைப்பு செயலாளர் அவர்கள் உரையில் தேசத்தில் ஏற்பட்டு அரசியல் ஆட்சி சூழ்நிலைகளை விளக்கி மத்திய மாநில அரசுகள் தொழிலாளர் நலன்களை தொடர்ந்து கடந்த காலங்கள் போல நல சட்டங்களை பராமரிப்பார்களா என ஐயப்பாடான நிலை வந்திருப்பதையும் மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்பதில் மத்திய அரசு காட்டி வரும் ஆர்வத்தையும் குறிப்பிட்டு மிகப் பெரிய சவாலான நேரத்தில் நாம் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்கள்.

இரண்டாண்டுகளுக்கான மேலான சட்டரீதியான போராட்டத்தில் சங்கங்களின் பட்டியலில் வாரியம் இணைத்திட்டது என்பது குறைந்தபட்ச வெற்றியாகத்தான் கருத வேண்டும், ஏனெனில்

நமது இலக்கு முதன்மையான முதல் சங்கம் ஆவதே என குறிப்பிட்டு கூறி அமைப்பை வலுப்படுத்த குறிப்பிட்டு பேசி செயற்குழு உறுப்பினர்கள் சிறப்பான விவாதங்களை மேற்கொண்டு முடிவுகளை எடுத்து செயல்படுத்தி எதிர்காலத்தில் முதல் தொழிற்சங்கமாக மாற்றியமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டார்கள்.

தமிழகம் முழுவதுமிருந்து கலந்து கொண்ட செயற்குழு உறுப்பினர்களின் விவாதங்களுக்கு பிறகு 28.07.2019 அன்று கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**1. மின்சார வாரிய உயர்மட்ட பேச்சுவார்த்தைக்கான சங்கங்களின் பட்டியலில் நமது வழக்கின் அடிப்படையில் இணைத்து உத்தரவிட்ட மின்சார வாரியத்திற்கு இச்செயற்குழு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.**

**2. மின்சார சட்டம் மற்றும் மின்சார சட்ட திருத்த மசோதா இவைகளைக் கொண்டு ஏற்கனவே பிரிக்கப்பட்ட மின்சார வாரியத்தை மேலும் பல கம்பெனிகளாக பிரிக்க முயற்சிக்க கூடாதென மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**3. மின்சார வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்திட தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் கேட்டுக் கொள்கிறது.**

**4. பகுதி நேரப் பணியாளர்கள் (சுகாதாரப் பணியாளர்கள்) அனைத்து பிரிவு அலுவலகங்களுக்கும் நியமித்திட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**5. 22.02.2018ல் கையெழுத்தான ஊதிய உயர்வு மற்றும் வேலை பளுவுக்கான முத்தரப்பு ஒப்பந்தப்படி வேலைபளுவுக்கான பதவிகளை மேலும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக அனுமதித்து உத்திரவிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**6. Tester Chemical பதவிகளில் பணியாற்றுபவர்களுக்கு Junior Chemist பதவி உயர்வு உடன் வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

**7. புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர வேண்டுமென இச்செயற்குழு தமிழக அரசையும், மின்சார வாரியத்தையும் கேட்டுக் கொள்கிறது.**

**8. மின்சார வாரியத்தில் உள்ள அடிப்படை பதவிகள், கள உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், தொழில்நுட்ப உதவியாளர், உதவி வரைவாளர், கணக்கீட்டாளர், உதவிப் பொறியாளர் காலியாக உள்ளதை நிரப்பிட உடனடி நடவடிக்கை எடுத்திட மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் இச்செயற்குகு கேட்டுக் கொள்கிறது.**

**9. 110 KV துணை மின்நிலையங்களில் இரவுப் பணியில் ஈடுபடும் பெண் இளநிலை பொறியாளர்கள் பாதுகாப்பின்றி பணியாற்றும் நிலை உள்ளதால் பாதுகாவலர்கள் (Security Guard) நியமிக்க வேண்டுமெனவும், 110 KV துணை மின்நிலையங்களுக்கு கம்பி வேலிக்கு பதிலாக சுற்றுச்சுவர் எழுப்பிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.**

**10. தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) உள்முகத் தேர்வுக்கு April 2019ல் பகுதி நேரப் பட்டயம் தேர்ச்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்க வாய்ப்பளித்து தொழில்நுட்ப உதவியாளராக தேர்வு செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.**

**11. மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் பெண் பணியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் மகப்பேறு விடுப்பு முடிந்து பணிக்கு திரும்புபவர்கள் குழந்தைகளை விட்டு வரும்**

நிலையை தவிர்க்க (குழந்தைகள் பகல் காப்பகம்) Creche அமைத்திட வேணுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

12. மின்சார வாரியம் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதற்காக தொழிற்சங்கங்களோடு உடனடியாக பேச்சுவார்த்தை தொடங்கிட வேண்டுமென வலியுறுத்தி ஒரு நாள் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் சென்னை தலைமை அலுவலகத்தில் நடத்திடுவது என தீர்மானிக்கப்பட்டது.

13. கட்டிட நிதி வசூலை அடுத்த இரு மாதத்திற்குள் நிறைவு செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

14. வேலூர் மண்டல அமைப்பு பணிக்காக மாநில உபதலைவர் திரு. V. ஜெயராமன் அவர்கள் தலைவராகவும், திரு. G.K. பாலகிருஷ்ணன் மாநில செயலாளர், திரு. R. சேகர் மண்டல செயலாளர், திரு. S. புகழேந்தி மாநில இணை செயலாளர், திரு. N. பழனி மாநில செயலாளர், திரு. V. இரமேஷ் மாநில இணை செயலாளர், திரு. J. இராஜராஜன் திட்ட செயலாளர், திரு. P. நாகப்பிள்ளை திட்ட செயலாளர், திரு. M. ஜானகிராமன் திட்ட செயலாளர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு குழு அமைக்கப்படுகிறது. இக்குழு தனது பணிகளை டிசம்பர் 2019க்குள் முடித்திட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

15. Thermal Stationsகளில் பணியாற்றி வரும் இளநிலை பொறியாளர்கள் (இயந்திரவியல்) அடுத்த பதவி உயர்வின்றி ஓய்வு பெறுவதால் AEE Mech (NI), வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

16. பதவி உயர்வில்லாது பணியாற்றி ஓய்வு பெற உள்ள மின்பாதை ஆய்வாளர்களுக்கு SN Foreman (Supernumery Foreman) வழங்கிட உத்திரவிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

17. எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் ஆண்டு சந்தாக்களை உரிய நேரத்தில் புதுப்பித்திட கிளைகள் துரித நடவடிக்கை மேற்கொண்டிட வேண்டுமென தீர்மனிக்கப்பட்டது.

18. களப்பணியாளர்களிலிருந்து வழங்கி வரும் Non Diploma Junior Engineer II Grade பதவி வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

19. Diploma Civil படித்த தொழிலாளர்களுக்கு Junior Engineer Civil II Grade வழங்கப்படாமல் உள்ளதை விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

20. கணக்கீட்டாளர்களுக்கு கணக்கீட்டாய்வாளர் பதவி உயர்வு வழங்க பெறப்பட்டுள்ள தகுதிக்காண் அறிக்கையின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து பதவி உயர்வு வழங்கிட வேண்டுவதுடன் முதன்மை பட்டியல் சரி செய்ய கோரிய கணக்கீட்டாளர்களுக்கு உரிய முதன்மை பட்டியல் வழங்கி கணக்கீட்டாய்வாளர் பதவி உயர்வு வழங்கிட வேண்டுமெனவும் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

21. மகளிரணியின் நிர்வாகிகள் கூட்டம் திருச்சியில் நடத்திடுவது என தீர்மானிக்கப்பட்டது. (இடம், தேதி பின்னர் தெரிவிக்கப்படும்)

செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்திட தேவையான நடவடிக்கை மேற்கொண்டு கிளைகளின் செயல்பாடுகள் மேம்பட தகுந்த ஆலோசனை கூறியதுடன் திருவண்ணாமலை கிளையில் விழுப்புரம் மண்டலத்தின் சார்பாக மாநில செயற்குழு நடத்திய திருவண்ணாமலை கிளைக்கு வாழ்த்துகளும் நன்றியும் கூறி தலைவர் முடிவுரை இனிதே அமைய செயற்குழு நிறைவுற்றது.

## களப்பணியாளர்கள் - மின்பாதை ஆய்வாளர் - பதவி உயர்வின்றி ஓய்வு பெற உள்ளவர் களுக்கு Super Numery Foreman பதவி உயர்வு வழங்கிட கோரி பெடரேஷனின் கடிதம்

பெறுநர்: நாள் : 07.08.2019

**தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு),**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : களப்பணியாளர்கள் - மின்பாதை ஆய்வாளர் - பதவி உயர்வின்றி ஓய்வு பெற உள்ளவர்களுக்கு Super Numery Foreman -பதவி உயர்வு - வழங்கிட கோருதல் தொடர்பாக...**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியில் சேர்ந்த மூத்த தொழிலாளர்களில் சுமார் 500 மின்பாதை ஆய்வாளர்கள் அடுத்த ஓரிரு ஆண்டுகளில் ஓய்வு பெற உள்ளார்கள். பணிக்காலத்தில் குறைந்தபட்சம் மூன்று பதவி உயர்வுகள் கூட இல்லாத நிலையில் ஓய்வு பெறும் நிலை உள்ளது.

எனவே மேற்கண்ட மின்பாதை ஆய்வாளர்களுக்கு மிகை நிலை ஆக்க முகவர்கள் Super Numery Foreman பதவி உயர்வு வழங்கிட கேட்டுக் கொள்கிறோம். ஒரு ஆண்டு உயர்வுக்கான பணப்பயன் மட்டுமே கிட்டுமாதலால் வாரியத்திற்கு பெரும் பொருள் செலவு வராது என்பதால் பரிசீலனை செய்து உத்திரவிட வேண்டுகிறோம்.

**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## பட்டய படிப்பு (பகுதி நேரம்) 2019ல் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வாய்ப்பளித்திட கோருதல் தொடர்பாக வாரியத்திற்கு பெடரேஷனின் கடிதம்

பெறுநர்: நாள் : 07.08.2019

**தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு),**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : தொழிற்நுட்ப உதவியாளர் (மின்னியல்) உள்முகத் தேர்வு - பட்டய படிப்பு (பகுதி நேரம்) 2019ல் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் வாய்ப்பளித்திட கோருதல் - தொடர்பக.**

**பார்வை : 1) Lr.No. 065885/611/G57/G571/2018 Dt. 02.02.2019**
**2) Lr. No. 065885/611/G57/G571/2018-2 Dt. 11.06.2019**
**3) Lr. No. 065885/611/G57/G571/2018-3 Dt. 25.06.2019**

பார்வை (1)ல் கண்டுள்ளபடி தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) உள்முகத் தேர்வுக்கு தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு 04.04.2019க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிட கோரப்பட்டுள்ளது.

பார்வை (2)ல் கண்டுள்ளபடி கணக்கீட்டு பிரிவில் பணியாற்றும் தகுதியுடைய பணியாளர்கள் விண்ணப்பிக்க 20.06.2019 வரை காலக்கெடு தந்தும் பின்னர் பார்வை (3)ன்படி இணையதளக் கோளாறினால் மேற்கண்டவர்கள் விண்ணப்பிக்க 28.06.2019 முதல் 09.07.2019 வரை அனுமதிக்கப்பட்டுள்ளது.

பார்வை (2) மற்றும் பார்வை (3) அறிவிப்பினால் 2019' ஏப்ரல் மாதத்தில் பட்டயப் படிப்பு (பகுதி நேரம்) பயின்ற தேர்ச்சி பெற்றவர்கள் உள்முகத் தேர்வில் வாய்ப்பளிக்க வேண்டி மனு செய்து வருகிறார்கள். குறிப்பாக பார்வை (1)ன்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டதில் 2018ம் ஆண்டு மின்சார வாரியத்தில் நேரடி நியமனம் மூலம் பணியில் சேர்ந்தவர்கள் பணிக்கு வருவதற்கு முன்னர் பட்டய படிப்பு படித்திருப்பதால் உள்முகத் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

மின்சார வாரியத்தில் நீண்ட காலமாக பணியாற்றுபவர்கள் குறிப்பாக 2009 மற்றும் 2010ம் ஆண்டுகளில் பட்டய படிப்பு படிக்க விண்ணப்பித்தும் உரிய அனுமதி மற்றும் சேர்க்கை கிடைக்காததால் கடந்த நான்காண்டுகளுக்கு முன்னர் படிக்க சேர்ந்து 2019 ஏப்ரல் மாதத்தில் படித்து முடித்து தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

எனவே, வாரியத்தில் முன்னரே பணியில் சேர்ந்தவர்கள், உரிய அனுமதி பெற்று படித்தவர்கள் பாதிக்கப்படாவண்ணம் 2019 ஏப்ரல் மாதத்தில் தேர்ச்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கும் வகையில் பார்வை (1)ல் கண்டுள்ள விவரங்கள் கோரும் உத்தரவில் கால நீட்டிப்பு செய்து மேற்கண்டவர்களும் உள்முகத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கும் வகையில் தகுந்த மேல் நடவடிக்கை மேற்கொண்டு உத்திரவிட்டு விவரங்கள் கேட்டு பெற உத்திரவிட்டு உதவிட வேண்டுகிறோம்.

**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## TNEB தலைமை அலுவலகம் - பகல் நேர குழந்தைகள் காப்பகம் அமைத்திட கோரி பெடரேஷனின் கடிதம்

பெறுநர்: நாள் : 08.08.2019

**தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு),**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : TNEB - தலைமை அலுவலகம் - பகல் நேர குழந்தைகள் காப்பகம் - அமைத்திட வேண்டுதல் - தொடர்பாக.**

TNEB தலைமை அலுவலகம் NPKRR மாளிகை பன்னடுக்குகளில் செயல்பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தில் பெண் பணியாளர்கள், அலுவலர்கள், பொறிஞர்களென ஏராளமானோர் பணியாற்றி வருகிறார்கள். மேற்கண்ட பெண்களில் பலர் குழந்தைப்பேறு விடுப்பு முடிந்து பணிக்கு திரும்பும் சமயம் குழந்தையை பராமரிப்பதில் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்கின்றனர்.

பெரும்பான்மையாக பெண்கள் பணியாற்றுமிடத்தில் பகல் நேரக் குழந்தைகள் காப்பகம் (Chrech) என்பது அவசியமாகிறது. எனவே, தலைமை அலுவலகத்தில் குழந்தைகள் காப்பகம் அமைத்து பெண் பணியாளர்கள் நலன் பாதுகாத்திட வேண்டுகிறோம்.

கடந்த ஜூலை 27, 28ல் நடைபெற்ற எங்களது பெடரேஷனின் மாநில செயற்குழுவிலும் மேற்கண்ட விபரங்கள் விவாதிக்கப்பட்டு தீர்மானமாக நிறை வேற்றப்பட்டு, தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதை பரிசீலித்து உடன் நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

**பண்டிகை முன்பணம் (Festival Advance) ரூபாய் 5000/-லிருந்து ரூ. 10,000/- ஆக உயர்த்திய அரசாணை**

# FINANCE (SALARIES) DEPARTMENT

**G.O.Ms. No. 240, Dated 02nd August 2019**

(Vikari, Aadi-17, Thiruvalluvar Aandu - 2050)

**ABSTRACT**

**Advance - Festival Advance to Government Employees** - Enhanced Orders - Issued.

---

**Read:-**

G.O.Ms.No. 388, Finance (Salaries) Department, dated 06-11-2012

**Order:**

In the Government Order read above, Government have ordered for enhancement of Festival Advance from Rs. 2,000/- to Rs. 5,000/- to Government employees, Teachers, Teaching and Non-Teaching Staff of the local bodies, aided educational institutions and the employees who are eligible to draw the Festival Advance, as per rules in force.

2. During the Budget Session for the year 2019-2020, the Hon'ble Deputy Chief Minister, among others, made the following announcemnet:-

''ஒரு அரசுக்கு அச்சாணியாக திகழ்பவர்கள் அரசு ஊழியர்கள் ஆவார்கள். அவர்கள் நலனில் அக்கறை கொண்டது அம்மா அவர்களது அரசு. அந்த அடிப்படையில் அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு தற்போது வழங்கப்படும் பண்டிகைக்கால முன்பணம் 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

3. The Government after careful consideration, direct that the Festival Advance payable to the Government employees, Teachers, Teaching and Non-Teaching Staff of the local bodies, aided educational institutions and the employees who are eligible to draw the Festival Advance be enhanced from Rs. 5,000/- to Rs. 10,000/- (Rupees Ten thousand only). There shall be no change in the existing procedure for sanction and recovery of Festival Advance.

4. These orders shall take immediate effect and apply to festivals to be celebrated after the date of issue of this order.

**(By order of the Governor)**

**S. KRISHNAN**
Principal Secretary to Government

# 2008ம் ஆண்டிலிருந்து நிரந்தரம் கேட்டு ஒப்பந்த தொழிலாளர்கள் தொழிலாளர் உதவி ஆணையரிடத்தில் தாக்கல் செய்த வழக்கு விபரம் கேட்டு தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) அவர்களின் கடிதம்

**மிக அவசரம் - நீதிமன்ற வழக்கு**

## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

**நிர்வாகக் கிளை**

அனுப்புநர்

**பொறி.ஆ. அசோக்குமார்,** B.E.,
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு,
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

பெறுநர்

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்,
அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள்

**கடித எண். 106285/ஜி65/ஜி652/2011-11, நாள்: 29.07.2019**

ஐயா,

பொருள் : **நிருவாகக் கிளை - நீதிமன்ற வழக்கு - தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அவர்கள் முன் பணி நியமனம் வேண்டி மனுதாரர்கள் தாக்கல் செய்யும் வழக்குகள் - மாதாந்திர அறிக்கை கோருவது தொடர்பாக.**

பார்வை : **இவ்வலுவலக கடித எண். *106285/965/ஜி65/ஜி652/2011-10*, நாள்: *09.01.2019*.**

ஒப்பந்த தொழிலாளர்களாக பணிபுரிந்து வாரியத்தில் பணி நிரந்தரம் வேண்டி தொழிலாளர் ஆய்வாளர்/ தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அவர்கள் முன் பணி நியமனம் கோரிய மனுக்கள் 2008 முதல் 2019 வரை மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்)/ (தொழிலாளர் ஆய்வாளர்) அவர்களின் மூலமாக உத்தரவு பெற்ற வழக்குகுளின் விபரங்கள் ஆகியவற்றை Legal Monitoring System-த்தில் பதிவு செய்து அதன் விபரங்களை 31.07.2019-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்/- 29.07.2010)

**(ஆ.நா.ந. அமுதா)**

*முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/தொழிலாளர்*
*தலைமைப் பொறியாளர்/பணியமைப்புக்காக*

# புற்று நோய் சிகிச்சைக்கான சிறப்பு விடுப்பு - அரசாணை

**ABSTRACT**

Fundamental Rules - Rule 85 of Fundamental Rules - Special Casual Leave - Extending the Special Casual Leave to the Government Servants who are undergoing Chemotherapy / Radiotherapy for Cancer - Orders - Issued.

---

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (FR. III) DEPARTMENT**

G.O. (Ms.) No. 89

Dated : 16.07.2019
விகாரி வருடம், ஆனி-31,
திருவள்ளுவர் ஆண்டு 2050

**Read :**

1. From the Director fo Public Health and Preventive Medicine, Chennai, Letter R. No. 75328 / E4/ 2017/S1, dated : 11.09.2017
2. From the Principal Secretary to Government, Health and Family Welfare Department, Letter No. 16987 / Z1/ 2017-3, dated 20.10.2017.

******

**ORDER :**

Hon'ble Minister (Fisheries & Personnel and Administrative Reforms Department) on 05.07.2019, in the floor of Tamil Nadu Legislative Assembly, has made the following announcement:-

**''புற்று நோய் சிகிச்சைக்கென சிறப்பு விடுப்பு**

புற்று நோயினால் பாதிக்கப்பட்ட அரசுப் பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, தற்போது அனுமதிக்கப்பட்ட விடுப்புகளுடன், கீமோ தெரபி (Chemo-therapy) மற்றும் ரேடியோ தெரபி (Radio-therapy) சிகிச்சை பெறும் ஒவ்வொருமு முறையும், அவர்களுக்கு முழு ஊதியத்துடன் 10 நாட்கள் சிறப்பு விடுப்பு வழங்கப்படும்.''

2. In the letter first read above the Director of Public Health and Preventive Medicine, Chennai has sent the following suggestion to the Government:-

"A Leave period of 10 days, starting from the day before the first day of Chemotherapy can be granted as Special Leave for the benefit of the Government Servants undergoing Chemotherapy for Cancer, as the patients undergoing chemotherapy will have to visit the hospital one day before the scheduled date for chemotherapy for undergoing pre-chemo investigations and require another 8 days for recovery. (1 day prior to the date of chemotherapy +1 day for chemotherapy + 8 days for recovery Total = 10 days)"

3. In the letter second read above, the Health and Family Welfare Department has forwarded the above suggestion for examining the feasibility of granting short term special leave

(Spl. C.L.) on medical certificate other than eligible leave for undergoing Chemotherapy / Radiotherapy treatment for Cancer as and when required.

4. The Government after careful consideration accept the above suggestion of Director of Public Health and Preventive Medicine and directs that Special Casual Leave be granted to a Government Servant who is undergoing Chemotherapy / Radiotherapy treatment for Caner, every time, for a period of 10 days starting from the day prior to the date of Chemotherapy / Radiotherapy, over and above, the other eligible leave to him, subject to the production of the Medical Certificate from the Medical Officer in-charge of a medical insitution of her / his having undergone the said treatment.

5. Necessary amendments to Fundamental Rules will be issued, separately.

**(By order of the Governor)**

**S. SWARNA**
Secretary to Government

## களப்பணியாளர்கள் - மாற்றுபணி உத்தரவு - ரத்து செய்வது - அறிவுறுத்தல் வழங்குவது தொடர்பாக வாரியத்தின் கடிதம்

### தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

**(நிர்வாகக் கிளை)**

அனுப்புதல்
பொறிஞர் ஆ. அசோக்குமார், B.E.,
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு,
144, அண்ணாசலை, சென்னை - 600 002.

பெறுதல்
அனைத்து தலைமைப் பொறியாளர்கள்,
அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள்,

**க.எண். 053486/771/ஜி43/ஜி431/2019 நாள்: 11.07.2019**

ஐயா,

**பொருள் : நிர்வாகம் - களப்பணியாளர்கள் - மாற்றுவழி உத்தரவு (Diversion Order) - ரத்து செய்வது - குறித்து - அறிவுறுத்தல் வழங்குவது - தொடர்பாக.**

களப்பணியாளர்கள் பல்வேறு வட்டங்களில் அவர்களுக்குரிய களப்பணிகளில் (Field work) ஈடுபடுத்தப்படாமல், அலுவலக பணிகளில் மாற்றுவழி (Diversion Order) உத்தரவின் வாயிலாக உபயோகப்படுத்தப்படுவதால், கோட்டங்களில் உள்ள களப்பணிகள் மிகவும் பாதிக்கப்படுவதாக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, தலைவர் (ம) மேலாண்மை இயக்குநரிடம் முறையிட்டிருக்கின்றது.

எனவே, கோட்டங்களில் இருந்து மாற்றுவழி (Diversion Order) உத்தரவின் வாயிலாக பணிபுரியும் களப்பணியாளர்கள் சம்பந்தமாக கீழ்க்கண்டுள்ள அறிவுரைகளை உடனடியாக செயல்படுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1) களப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட மாற்றுவழி உத்தரவுகள் (Diversion Orders) அனைத்தையும் உடனடியாக ரத்து செய்து அவர்களின் சொந்த பணியிடங்களுக்கே திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

2) தவிர்க்க முடியாத அவசியமுள்ள நிர்வாகக் காரணங்களுக்காக களப்பணியாளர்களை அலுவலகப் பணிக்கு மாற்றுவழி மூலம் பணியமர்த்த வேண்டியிருந்தால் தலைமைப் பொறியாளர்

மட்டுமே அதன் அவசியத்தை கூர்ந்தாய்வு செய்து அதிகபட்சமாக 6 மாதங்களுக்கு மட்டுமே வழக்கமான ஒப்புதல் போல் இல்லாமல் அரிதினும் அரிதாக ஒப்புதல் அளித்து செயல்படுத்தலாம்.

3) மேற்கண்ட அறிவுரையினை கவனத்தில் கொள்ளாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4) மேற்கண்ட அறிவுறுத்தலின்படி ஏற்கனவே வழங்கப்பட்ட மாற்றுவழி உத்தரவுகளை (Diversion Orders) ரத்து செய்ததற்கான அறிக்கையை ''17.07.2019''க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஒப்பம்/---11.07.2019)

**(ஆ. அசோக்குமார்)**

தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு

---

## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

**(நிர்வாகக் கிளை)**

அனுப்புனர்
பொறிஞர் ஆ. அசோக்குமார், B.E.,
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

பெறுநர்
அனைத்து தலைமைப் பொறியாளர்கள்,
அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள்,

**கடித எண். 053486/771/ஜி43/ஜி431/2019-2, நாள்: 18.07.2019**

ஐயா,

**பொருள் : நிர்வாகம் - களப்பணியாளர்கள் - மாற்றுப்பணி உத்தரவு (Diversion Order) - ரத்து செய்வது - குறித்து - அறிவுறுத்தல் வழங்குவது - தொடர்பாக.**

**பார்வை : இவ்வலுவலக கடித எண். *053486/771/ஜி43/ஜி431/2019*, நாள்: *11.07.2019***

பார்வையில் குறிப்பிட்டுள்ள கடிதத்தின் வாயிலாக மாற்றுப்பணி (Diversion Orders) உத்தரவில் பணிபுரியும் களப்பணியாளர்களை அவ்வுத்தரவை ரத்து செய்து சொந்த பணியிடங்களுக்கு திருப்பி அனுப்பிட வேண்டுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

2) அதனைத் தொடர்ந்து, மாற்றுப்பணியில் (Diversion Orders) பணிபுரிந்து வரும் களப்பணியாளர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து மதிப்பீட்டாளர், மதிப்பீட்டு அலுவலர் (Assessment Staff & Officers), எழுத்துத்துறை சார்ந்த பணி (Provincial Staff & Officers) மற்றும், தொழில்நுட்ப பணியாளர் (Technical Assistants) பொறியாளர்கள் (Engineers) மற்றும் உள்ள **''அனைத்து பணியாளர்கள், அலுவலர்கள் ஆகியோர் அனைவருக்கும்''** வழங்கப்பட்டுள்ள மாற்றுப்பணி (Diversion Order) உத்தரவுகளை ரத்து செய்து அவர்கள் அனைவரையும் அவரவர் சொந்த பணியிடங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

3) எனவே, ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள மாற்றுப்பணி (Diversion Order) உத்தரவுகள் அனைத்தையும் உடனடியாக ரத்து செய்யும்படி மறுபடியும் வலியுறுத்தப்படுகிறது. மேலும், ரத்து செய்ததற்கான அறிக்கையை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும் கடைசி நாளை காலநீட்டிப்பு செய்து 20.07.2019க்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்/---18.07.2019)

**(ஆ. அசோக்குமார்)**

தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு

## VIP வாகன ஓட்டுநர்கள் சிறப்பு படி வழங்குவது குறித்த வாரிய உத்தரவு

## Tamil Nadu Generation and Distribution Corporation Limited

**(ABSTRACT)**

TANGEDCO - Allowances - Sanction of VIP Special Allowance to the drivers who are driving the VIP vehicles - Revised orders - Issued.

-------------------------------------------------------------------------------------------------------------------

**(SECRETARIAT BRANCH)**

**(Per.) CMD TANGEDCO Proceedings No. 149, Dated : 01.08.2019**

Aadi 16,
Vihari Varudam,
Thiruvalluvar Aandu 2050

**Read:-**

1. (Per) B.P. (Ch.) No. 156 (SB) Dated : 22.09.1992
2. (Per) B.P. (Ch.) No. 178 (SB) Dated : 19.10.2014.
3. (Per) CMD TANGEDCO Proceedings No. 165 (SB) Dated : 27.08.2018

******

**PROCEEDINGS:-**

In the Board's Proceedings first read above, orders were issued for sanctioning of VIP Special pay to those drivers who are driving vehicles of VIP's under the control of Chief Public Relation Officer including the driver attached to the Chairman's Car and other 5 VIP vehicles.

2. In the Board's Proceedings second read above, revised orders were issued sanctioning VIP special pay to the drivers who are driving the VIP vehicles for the following officers:

1. Chairman
2. Accounts Member
3. Member (Distribution)
4. Member (Genertion)
5. Secretary
6. Chief Financial Controller
7. Chief Engineer / Personnel
8. Chief Engieer / Planning

3. In the Board's Proceedings third read above, orders were issued for constitution of committee to re-examine and review the eligibility of VIP special pay being paid to the drivers at present with the following members:-

1. The Secretary/TANGEDCO (Chairman of the committee)
2. The Chief Engineer/Personnel

3. The Chief Financial Controller/General/TANGEDCO

The committee has examined in details and recommended the VIP special allowance instead of VIP Special Pay to the drivers who are driving for VIP's vehicles.

4. After careful consideration, the TANGEDCO hereby ordered that the VIP special allowance shall be sanctioned to the drivers who are driving the vehicles of the following VIPs/ Officers:-

1. Honb'le Minister for Electricity
2. Honb'le Minister for Fisheries
3. Chairman cum Managing Director/ TANGEDCO/TANTRANSCO/TNEB Limited
4. Former Chairman cum Managing Director
5. Joint Managing Director/TANGEDCO/TANTRANSCO
6. Managing Director/TANTRANSCO
7. Director/Distribution
8. Director/Generation
9. Director/Finance (TANGEDCO)
10. Director/Transmission Project
11. Director/Finance (TANTRANSCO)
12. Director/Operation
13. Director (Projects)
14. Secretary/TANGEDCO
15. Legal Advisor
16. VIP Pool (only one driver utilized in the office of Chief Public Relations Officer)

5. The TANGEDCO also ordered that the drivers of VIP vehicles shall be sanctioned **VIP special allowance instead of VIP special pay** on par with other allowances at **flat rate basis** and if the driver driving the VIP vehicle is transferred (or) deputed to the other offices (or) any other departments, the VIP special allowance should be stopped immediately.

6. Further it is ordered that the drivers who were driving the vehicles in Enforcement and Flying Squad shall be sanctioned only **Vigilance Special Allowance instead of Vigilance Special Pay.**

7. Any new proposal for sanction of VIP special allowance to any driver who is driving vehicles apart from the above list shall be referred to the Secretary/TANGEDCO for considerig the same by the committee for approval of the Chairman cum Managing Director.

8. This order will take effect from 01.08.2019.

9. The receipt of the Board's Proceedings may be acknowledged.

**(By order of the chairman cum managing director)**

**V. Chinnappaiyan**
Secretary

## நாமக்கல் மின் வட்டத்தில் பணி புரிபவர்களுக்கு (ஈரோடு - சேலம் மாவட்டப் பகுதிகள்) உயர்த்தப்பட்ட வீட்டு வாடகை மற்றும் நகர ஈட்டுப்படி - உத்தரவு

### தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

**(சுருக்கம்)**

நிர்வாகம் - படிகள் - வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி - சேலம் மற்றும் ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு Grade 1(b) நிலைக்குண்டான உயர்த்தப்பட்ட படிகள் வழங்க - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**(செயலகக் கிளை)**

(நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண். 147, நாள்: 01.08.2019

ஆடி - 16-ம் நாள்,
விகாரி வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2050

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை நிலை எண். 305, நிதி (படிகள்) துறை, நாள்: 13.10.2017
2. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு எண். ந.க. 16515/2018 (எச்-2), நாள்: 07.07.2018
3. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு எண். ந.க.1047/2018/ ஆர்-3), நாள்: 23.08.2018

★★★★

**செயல்முறைகள்:**

பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையில் 7-வது ஊதியக்குழு பரிந்துரையின்படி அரசு பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் அனைத்து படிகளும் உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. பார்வை 2-ல் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணையின்படி சேலம் மாநகராட்சி எல்லையிலிருந்து 16 கி.மீ. சுற்றளவிற்குள் வரும் நாமக்கல் மாவட்டத்தை சார்ந்த கீழ்க்காணும் பட்டியலில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன பகுதிகளில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு சேலம் மாநகராட்சிக்கான வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

1. ராசிபுரம்
2. திருச்செங்கோடு

3. பார்வை 3-ல் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணையின்படி ஈரோடு மாநகராட்சி எல்லையிலிருந்து 16 கி.மீ. சுற்றளவிற்குள் வரும் கீழ்காணும் பட்டியலில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் உள்ள பகுதிகளில் பணிபுரியும் அரசு

அலுவலர்களுக்கு ஈரோடு மாநகராட்சிக்கான வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

1. திருச்செங்கோடு நகராட்சி
2. திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம்
3. எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்
4. பரமத்தி ஊராட்சி ஒன்றியம்
5. கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம்

